முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.11.2025) முகாம் அலுவலகத்தில், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்தபோது, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

டெல்லியில் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்!

சிறப்பு புத்தகத்தை வெளியிட்டு நினைவுப் பரிசுகளை வழங்கினார்!

புதுடெல்லி, நவ. 9 -

டெல்லியில் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்.

"100 ஆண்டுகள் ஹாக்கி" சிறப்பு புத்தகத்தை வெளியிட்டார் துணை முதலமைச்சர் வீரர், வீராங்கனை களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கிய ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டின் பங்களிப்பை பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

டெல்லியில் நடைபெற்ற இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 100 ஆண்டுகள் ஹாக்கி சிறப்பு புத்தகத்தை வெளியிட்டு, வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா டெல்லியில் நடைபெற்றது. மேஜர் தயான்சந்த் தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விழாவை ஒன்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார். இவ்விழாவில் தமிழ்நாடு அரசு சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார். நிகழ்ச்சியில், முன்னாள் ஹாக்கி ஒலிம்பிக் போட்டியாளர்கள் மற்றும் ஹாக்கி வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி பாராட்டினார். தொடர்ந்து, 100 ஆண்டுகள் ஹாக்கி சிறப்பு புத்தகத்தையும் வெளியிட்டார். மேலும், கடந்த 100 ஆண்டுகளில் ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாடு சிறந்த பங்காற்றியதற்காக சிறப்பு சான்றிதழும் துணை முதலமைச்சர் உதயநிதியிடம் வழங்கப்பட்டது. ஆடவர் ஜூனியர் ஹாக்கிப் போட்டிக்கான உலகக்கோப்பை பயணமும் தொடங்கி வைக்கப்பட்டது.

விழாவில் உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி, தமிழ்நாட்டில் ஹாக்கி விளையாட்டு மிகுந்த பாரம்பரியம் கொண்டது என்றார். ஒலிம்பிக் விளையாட்டிற்கா கவும், இந்திய அணிக்காகவும் எண்ணற்ற ஹாக்கி வீரர், வீராங்கனை களை தமிழ்நாடு வழங்கி இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டில் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி ரூ.70 கோடி ஒதுக்கீடு

ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டிற்கென்று தனிச்சிறப்பான பாரம்பரியம் உள்ளது தமிழ்நாடு ஏராளமான ஹாக்கி வீரர்களை உருவாக்கி கொடுத்துள்ளது

ஒலிம்பிக், உலகக்கோப்பை போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் அதிகளவில் பங்காற்றி உள்ளனர் மதிப்புமிக்க பல்வேறு ஹாக்கிதொடர்களை தமிழ்நாடுநடத்தி இருக்கிறது ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை2025 ஹாக்கி போட்டியை தமிழ்நாடு நடத்த உள்ளது

முதல்முறையாக 24 நாடுகள் பங்கேற்கின்றன

சென்னை, மதுரையில் ஹாக்கி போட்டிகள் நடைபெற உள்ளன இந்த தொடருக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ரூ.70 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஹாக்கி விளையாட்டு பிரபலமாகியுள்ளது

விளையாட்டில் தமிழ்நாடு சிறந்து விளங்க முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டமே காரணம் தமிழ்நாட்டில் 11,000 ஹாக்கி வீரர், வீராங்கனைகள் இருப்பது பெருமையாக இருக்கிறது

அவர்கள் அனைவரும் கல்லூரி, பல்லைக்கழக, முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் விளையாடுகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

தேவகோட்டையில் வே.ரூசோவின் 27வது ஆண்டு நினைவு தினம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.கவினர் மலர் அஞ்சலி!

சிவகங்கை, நவ. 9 -

சிவகங்கை மாவட்ட கழக முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் முன்னாள் மாவட்ட மத்திய கூட்டுறவு துணை தலைவராக இருந்தவர் வே.ரூசோ. இவர் கடந்த 8.11.1998ம் ஆண்டு மரணம் அடைந்தார். அவரது நினைவினை போற்றும் வகையில் ஆண்டுதோறும் தேவகோட்டையில் சிவகங்கை மாவட்ட கழகம் மற்றும் ரூசோ குடும்பத்தினர் சார்பாக நினைவுதினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு நேற்று 27வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தேவகோட்டையில் உள்ள அவரது நினைவிடத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் முதலாவதாக மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அவரை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ, மகன் ஆர்.நிஷாந்த், மகள் ஜெம் மாநிபிலா, மருமகன் ராஜா ஸ்டீபன் , மருமகள் கேத்தரின் , பேரன்கள் ஆர். ருசோ, அ.ருசோ ஆகியோர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ .முன்னாள் எம்.எல்.ஏக்கள் கே. முருகவேல், சுப. மதியரசன், காரைக் குடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நல்லசேதுபதி, மாவட்ட துணைச் செயலாளர் செயலாளர் த.சேங்கை மாறன்,

தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி. பாலா, மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, செயற்குழு உறுப்பினர் மேயர் எஸ். முத்துதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.மதார் சேட், பள்ளத் தூர் கே.எஸ். ரவி, ஒன்றிய செயலாளர்கள் நாகனி ரவி , வே.பூபால சிங்கம் , லெ.மு.ரவிச்சந்திரன், சுப. சின்னத்துரை நா. நெடுஞ்செழியன் திருமலை முத்துராமலிங்கம், துரை.ராஜாமணி அ.முத்துச்சாமி, ஆறு.செல்வராஜன், வே. தமிழ் மாறன், வே.ஆரோக்கியசாமி, எம். ஏ.கடம்பசாமி, அ.சுப்பிரமணியன், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கார்த்திகேயன், பகுருதீன் அலிபாய், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது , அமைப்பாளர் சிங்கமுத்து ,மகளிரணி நிர்வாகிகள் மணிமேகலை முத்துச்சாமி , மார்கரெட் கமலா, திலகவதி கண்ணன், சண்முகப்பிரியா ராஜாத்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார்,, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலிக்குத்தி சீனிவாசன், துணை அமைப்பாளர் அழகையா ,மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம். முருகானந்தம் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் சரவணன், ருக்மா சரவணன், ஒன்றிய நகர பேருர் கழக, நிர்வாகிகள் அன்புச் செழியன், ஜெ. ஜாகிர் உசேன், இளங்கோ, கருணாநிதி, எழில்மாறன் ,பாண்டி மீனா, மும்தாஜ், அசோக், முத்து, சரவணன், மும்முடிநாதன், அப்துல் ஜபார், இளைஞரணி அரவிந்த், நகர்மன்ற உறுப்பினர்கள் மனோ பிரகாஷ், சேக் அப்துல்லா, பிச்சையம்மாள், சிவகாமி, ராமதாஸ், பெருமாள்,

மகேந்திரன், அன்னவேந்தன், காதர் மைதீன், சுதா, மனோகரன் ,தமிழ், எம் .பி .டி .சி செல்வம், ஷேக் தாவுது, உதயசூரியன், நைனா முகமது, சம்சுதீன், அருளரசு, ராஜா, விவசாய அணி காளிமுத்து, வே.கருணாகரன், அண்ணாமலை, மாவட்ட பிரதிநிதி சேவியர், மாவட்ட சிறுபான்மை நல துணை அமைப்பாளர் சேவியர், மற்றும் ஒன்றிய நகர பேருக்குள்ள நிர்வாகி கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள் .

அதனை தொடர்ந்து பல்வேறு சமூக அமைப்புகள் சார்பில் ருசோ நினைவிடத்தில் நிர்வாகி கள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள். அதைத்தொடர்ந்து மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ ஏற்பாட்டின் பேரில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

சர்வதேச ஹாக்கி சங்கத்துடன் இணைந்து இந்திய ஹாக்கி நூறாண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடும் விதமாக நாடு முழுவதும் இன்றைய தினம் டெல்லியில் இந்திய ஹாக்கி சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் 500பள்ளிகள் 1000 ஹாக்கி விளையாட்டு போட்டிகள் நடத்தி கின்னஸ் சாதனை நிகழ்த்த உள்ள நிலையில் விளாத்திகுளம் ஸ்ரீ அம்பாள் வித்யாலயா பள்ளியில் ஹாக்கி போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஸ்ரீ அம்பாள் வித்யாலயா பள்ளி தலைமை ஆசிரியை அமராவதி, உடற்கல்வி இயக்குனர் வையணன், விளையாட்டு பயிற்சியாளர் முகேஸ்வரி, உடற்கல்வி ஆசிரியர்கள் அந்தோணியம்மாள், மனோகரன், கார்த்திகேயன் உள்ளிட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 11 ஊராட்சிகளுக்கு குப்பை சேகரிக்கும் வாகனங்களை 06.11.2025 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.

ரூ.1.17 கோடி மதிப்பீட்டிலான 3 முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு!

கடலூர் மாவட்டத்தில் ரூ.11.17 கோடியில் 8 புதிய திட்டப் பணிகள்!

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அடிக்கல் நாட்டினார்!

கடலூர், நவ. 9-

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.1.17 கோடி மதிப்பீட்டிலான 3 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.11.17 கோடி மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு 06.11.2025 அன்று அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 11 ஊராட்சிகளுக்கு ரூ.27,10,500 மதிப்பீட்டிலான குப்பை சேகரிக்கும் வாகனங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் நோக்கில் செயல்படுத்தப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 4,50,134 குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்பட்டுவருகிறது. மேலும், முதியோர்களின் நலன் கருதி மாதந்தோறும் ரூ.1,200 ஆக ஓய்வூதியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,40,000 முதியோர்கள் பயனடைகின்றனர்.

மகளிர்கள் வேலைக்கு சென்று வருமானம் ஈட்டுவதில் பேருந்து பயணத்திற்காகவே ஒரு பகுதியினை செலவு செய்கின்றனர். எனவே அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மகளிர் விடியல் பயணம் திட்டத்தினை செயல்படுத்தியன் மூலம் கடலூர் மாவட்டத்தில் தினந்தோறும் 1,48,209 மகளிர்கள் கட்டணமில்லாமல் பேருந்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்திடவும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் பல்வேறு துறைகளின் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கொத்தவாச்சேரி மற்றும் அரங்கமங்கலம் பகுதியில் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தலா 35 இலட்சம் மதிப்பீட்டில் உளர் களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடம் திறந்துவைக்கப்பட்டது. கொத்தவாச்சேரியில் தரம் பிரிப்புக் கூடத்தின் அளவு 125 மெ.டன் அளவிலும், உலர்களத்தின் அளவு 270 ச.மீட்டர் அளவிலும் மற்றும் அரங்கமங்கலத்தில் கொத்தவாச்சேரியில் தரம் பிரிப்புக் கூடத்தின் அளவு 125 மெ.டன் அளவிலும், உலர்களத்தின் அளவு 272 ச.மீட்டர் அளவிலும் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் குறிஞ்சிப்பாடியில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். இதனை நிறைவேற்றும் வகையில் குறிஞ்சிப்பாடியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி புதிய வட்டாட்சியர் அலுவலகம் ரூ.6.93 கோடி மதிப்பீட்டில் தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம்தளம் தலா 397 ச.மீ பரப்பளவுடன் என மொத்தம் 1191.00 ச.மீ பரப்பளவில் கட்டும் பணிக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது. தரைதளம் வரவேற்பு அறை, காத்திரப்புக் கூடம், நுழைவு வாயில் கணினி அறை, அலுவலக அறை, கழிப்பறை வசதிகளுடனும், முதல்தளம் வட்டாட்சியர் அறைகள், அலுவலக அறை, கழிப்பறை வசதிகளுடனும், இரண்டாம் தளம் கூட்டரங்கம், பதிவறை, நில அளவையர் பிரிவு, அலுவலக அறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட வுள்ளது.

அரசு மூலம் வழங்கும் மருத்துவ வசதிகள் பொது மக்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும், மகப்பேறு சிகிச்சை நகர்ப்புற பகுதிகளுக்கு சென்று மேற்கொள்வதை குறைத்து உள்ளூரிலேயே பிரசவம் மேற்கொள்ளவும், அவசர காலங்களில் பொது மக்கள் அருகிலேயே சிகிச்சை மேற்கொள்ளவும் சுகாதாரத் துறையின் சார்பில் ஆடூர்அகரம் மற்றும் கீழ்பூவாணிக்கும் பகுதியில் தலா ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் அரசு துணை சுகாதார நிலையம் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டது.

பள்ளி மாணவர்கள் பாது காப்பான சூழ்நிலையில் மனதிற்கினிய வகையில் கல்வி கற்றிடும் வகையில் குறிஞ்சிப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்டார் முள்ளிப்பள்ளம் அரசு மேல் நிலைப் பள்ளியில் மாவட்ட கனிமவள நிதியின் கீழ் தலா ரூ.94.24 இலட்சம் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கட்டடங்கள், குண்டியமல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட கனிமவள நிதியின் கீழ் ரூ.47.12 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் 2 வகுப்பறை கட்டடங்கள், ஆடூர்அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.47.12 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தங்களது புத்தகம் வாசிக்கும் திறனை அதிகரித்திடவும், பொதுஅறிவு மற்றும் பிற தகவல்களை படித்து பயன்பெறும் வகையிலும், போட்டி தேர்விற்கு தயாராகும் தேர்வர்கள் படித்து பயனடையும் வகையிலும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. மேலும், கருங்குழியில் ரூ.74.50 இலட்சம் மதிப்பீட்டில் கிளை நூலகம் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி நகரமன்ற தலைவர் கோகிலா குமார், துணைத்தலைவர் இராமர், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை (கட்டடம்) சிவசங்கரநாயகி, மாவட்ட சுகாதார அலுவலர் பொற்கொடி, மாவட்ட நூலக அலுவலர் முருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விருதுநகர் வடக்கு – தெற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

நவம்பர் 11 -SIR-ரைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள்

கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் -தங்கம் தென்னரசு அறிவிப்பு!

விருதுநகர். நவ.9-

தமிழ்நாட்டில் தொடங்கியுள்ள தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வரும் நவம்பர் 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று விருதுநகர் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் காலை 10 மணி அளவில் விருதுநகர் மாரியம்மன் கோவில் திடலில் மாவட்டச் செயலாளர்கள் - கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக விருதுநகர் மாவட்டச் செயலாளர்கள் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற இருக்கும் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் கைப்பாவையாக இயங்கும் இந்திய தேர்தல் ஆணையம், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினை (SIR) நவம்பர் 4ம் தேதி முதல் தமிழ்நாட்டில் அமல்படுத்தும் பணியைத் தொடங்கி உள்ளது.

தி.மு.கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும் இந்திய தேர்தல் ஆணையம் போதிய கால அவகாசமும் மற்றும் முறையான வரையறையும் கொடுக்காமல், இந்த தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினைக் கொண்டு வந்து தகுதியான வாக்காளர்களை சேர்த்திட இயலாமல் போய்விடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்கிற ரீதியில், வாக்காளர் சீராய்வு என்கிற பெயரில், தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்களை பாடாய்படுத்தும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பாக ஒன்றிணைந்து வருகின்ற நவம்பர் 11ம் தேதி அன்று காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்று அனைத்து கட்சித் தலைவர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி விருதுநகர் வடக்கு-தெற்கு மாவட்ட தி.மு.க. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் விருதுநகர், மாரியம்மன் கோவில் திடலில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது. இதில் மதச்சார்ப்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள், செயல்வீரர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

இவ்வாறு விருதுநகர் வடக்கு, தெற்கு, மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.